பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 10 2024 **MONDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2. கனமழை எச்சரிக்கை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

3. மழை பாதிப்பை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. மழைநீர் வடிகால் பணிகளை திமுக அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக-வும், பாமக-வும் குற்றம் சாட்டியுள்ளன.

5. **Almaty** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Kadhe – Rithvik Choudary** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<<<>>>>>>**

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<u>*(சவுண்ட் 'பைட் - பாலச்சந்திரன் (1) – 26 செகண்ட்ஸ்)*</u>

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (2) – 55 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு பாலச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (3) – 17 செகண்ட்ஸ்)*

வானிலை ஆய்வு மையத்தின் இந்த எச்சரிக்கையையடுத்து, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவடங்களில் நாளை பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று முதலமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாளை தொடங்கி வரும் 18-ஆம் தேதிவரை தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஊழியர்கள் வீட்டில் இருந்தே பணிபுரியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ மற்றும் பறக்கும் ரயில்களின் சேவையை அதிகரிக்க வேண்டும், ஆவின் நிறுவனம் தங்கு தடையின்றி பால் விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டும் போன்ற அறிவுரைகளையும் முதலமைச்சர் வழங்கியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கடற்கரை, சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், நீர்நிலைகள் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் கூட வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், அரசு அளிக்கும் முறையான முன்னெச்சரிக்கைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

*(சவுண்ட் பைட் - கே என் நேரு – 53 செகண்ட்ஸ்)*

இந்நிலையில், பருவமழை நோய் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தமிழகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் நாளை மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் சேலத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் 12 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

சென்னை லேடிவெலிங்டன் கல்வியியல் கல்லூரியில் நாளை நடைபெறவிருந்த பி.எட் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு கனமழை எச்சரிக்கை காரணமாக 21-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த சில தினங்களாக கோவை, திருப்பூர், புதுக்கோட்டை, சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்கள் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மின்கம்பிகள் அறுந்து விழுந்ததில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் இதுவரை எவ்வித நிவாரண பணிகளும் மேற்கொள்ளவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

மழைநீர் வடிகால் பணிகளை மாநில அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை, சிவகங்கை, கடலூர், திருப்பத்தூர், ஆகிய மாவட்டங்களில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மழை காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப்பணிகள் செய்யப்படாததே இதற்கு காரணம் என்று அவர் குறை கூறியுள்ளார். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 45-க்கும் மேற்பட்ட இடங்களில் மழை நீர் வடிகால்களை இணைக்கும் பணிகள் முடிக்கப்படவில்லை என்றும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் மீன்வளத்துறை சார்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வுகாணுமாறு ஆட்சியர் திருமதி அழகுமீனா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் தகவல் பெறும் உரிமை சட்டம் குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை ஆட்சியர் திருமதி பூங்கொடி தொடங்கிவைத்தார்.

<<<<<<<<>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் எனாத்தூரில் உள்ள தனியார் கலைக்கல்லூரியில் பேரிடர் தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<<<>>>>>>

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீயணைப்புத்துறை சார்பில் பேரிடர் ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<<<>>>>>>

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் ஆயிரத்து 860 கிலோ, தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Almaty** ஓபன் டென்னிஸ் போட்டியில் இநதியாவின் **Arjun Kadhe – Rithvik Choudary** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 7-6 என்ற செட் கணக்கில் பின்லாந்தின் **Patrik Niklas -** இத்தாலியின் **Marco Bortolotti** இணையை வென்றது.

<<<<<<<<>>>>>>

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி ஒரு இன்னிங்ஸ் 70 ரன் வித்தியாசத்தில் சௌராஷ்ட்ரா அணியை வென்றது.

கோவையில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, ஐந்து விக்கெட் இழப்பிற்கு 35 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய சௌராஷ்ட்ரா அணி 94 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**Gurjapneet Singh** அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 367 ரன்னுக்கும், சௌராஷ்ட்ரா அணி 203 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன

<<<<<<<<>>>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டிக்கான வீரர்கள் ஏலம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

<<<<<<<<END>>>>>>